யார் பெண்கள் எதிரி? : ஆளுங்கட்சி - காவல்துறை — ஊடகங்கள்

தி.மு.க.விற்கு எதிராக அவதூறு பரப்பும் கூட்டுச் சதியாளர்கள்!

தி.மு.க.விற்கு எதிராக அதன் அரசியல் எதிரிகள் வழக்கமாகப் பயன்படுத்தும் அவதூறு ஆயுதங்களில் ஒன்று, 'திமுக பெண்களுக்கு எதிரான கட்சி' என்பதாகும். இந்தப் பொய் ஏதோ இப்போது கிளப்பப்பட்டது அல்ல; நெடுங்காலமாகவே பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து பரப்பப்பட்டு வருகிறது.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை கலைஞர் தனிப்பட்ட முறையில் விமர்சித்ததாக ஒரு பொய் பரப்பப்பட்டது. அதற்கு எந்தச் சான்றோ, ஆதாரமோ, பதிவோ கிடையாது. ஆனால், இந்தப் பொய்யைப் பல பத்தாண்டுகளாக உயிரோடு வைத்திருக்கிறார்கள். அதேபோல, சட்டமன்றத்தில் ஜெயலலிதா தாக்கப்பட்டதாக மற்றொரு பொய். அன்று அ.தி.மு.க.வில் இருந்த திருநாவுக்கரசரே அதைத் திட்டவட்டமாக மறுத்த பிறகும், அந்தப் பொய் இன்றளவும் உலாவருகிறது.

கண்ணதாசன் கலைஞரைப் பற்றி 'வனவாசம்' நூலில் குறிப்பிட்டிருப்பதாகப் பரப்பப்பட்ட மற்றொரு பச்சைப் பொய் மறுக்கப்பட்ட போது, அந்த நூலிலேயே இல்லாத ஒன்றை இட்டுக் கட்டி இன்றும் பரப்பி வருகிறார்கள்.

தொடரும் அருவருப்பான தாக்குதல்கள்:

அன்று மட்டுமல்ல; இன்று தி.மு.க தலைவர், முதன்மைத் தலைவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரைக் குறித்து எண்ணற்ற ஆபாச அவதூறுகள் ஊடகங்களிலும் பொது மேடைகளிலும் தொடர்ந்து எந்தத் தயக்கமும் இன்றி பரப்பப்பட்டு வருகின்றன. ஜெயலலிதாவே அப்படிப்பட்ட அவதூறுகளைப் பகிரங்கமாகப் பேசியிருக்கிறார். அ.தி.மு.க, பா.ஜ.க.வினர் திமுகவினர் மீதும் தலைவர்களின் குடும்பத்தினர் மீதும் செய்யாத ஆபாச அவதூறுகள் இல்லை.

சமீபத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுச்சாமி, கலைஞர் மீது கக்கிய அருவருப்பான வன்முறைப் பேச்சை காங்கிரஸ் தலைமை கண்டிக்கக்கூட இல்லை. தி.மு.க. அளித்த ஆதரவால் தமிழ்நாட்டில் அரசியல் முகவரி பெற்றவர்கள், இன்று தி.மு.க.வுக்கு எதிரான ஆபாசத் தாக்குதலில் மற்றவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ளனர். சென்ற ஆண்டு தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, காமராஜரை அவதூறு செய்ததாக காங்கிரஸ் ஒரு பொய்யைப் பரப்பியது. காமராஜரை காங்கிரஸைவிட தூக்கிப்பிடித்த இயக்கம் தி.மு.க.

இன்று தி.மு..க.விற்கும் அதன் தலைவர்களுக்கும் எதிரான ஆபாசத் தாக்குதலில் முன்னணியில் இருப்பது த.வெ.க. அவர்களது சமூக வலைதளச் செயல்பாட்டாளர்கள் மேற்கொண்டிருக்கும் இழிவான தாக்குதல்கள், முக்கியமாக தி.மு.க.வைச் சேர்ந்த பெண்கள் மீதான அவதூறுகள், வரலாறு காணாதவை. இது குறித்து அளிக்கப்படும் எந்தப் புகாரின் மீதும் காவல்துறை உரிய நடவடிக்கை எடுப்பதில்லை.

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா மற்றும் ஆளுங்கட்சியான தி.மு.க தலைவர்கள் மீது சமூக வலைதளங்களில் அவதூறான பதிவுகள் பகிரப்பட்டது தொடர்பாக காவல் ஆணையரிடம் நேரில் புகார் அளித்திருந்தார். புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், தி.மு.க. தலைவர்கள் மற்றும் மேயர் பிரியா குறித்துச் சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டுள்ள அவதூறுப் பதிவுகளை உடனடியாக நீக்க வேண்டும் என்று காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளது.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால், தி.மு.க தலைவர்கள் மீது- முக்கியமாகப் பெண்கள் மீது-செய்யப் படும் அவதூறுகளுக்கு த.வெ.க.வினர் மற்றும் எதிர்த்தரப்பினருக்குத் தனிப்பட்ட சலுகைகளும் விலக்குகளும் அளிக்கப்பட்டுள்ளனவோ என்ற ஐயம் எழுகிறது. காவல் துறைக்கு அது ஒரு பொருட்டே அல்ல; நடவடிக்கை வேண்டும் என்றால் நீதிமன்றம் சென்றுதான் உத்தரவு பெற வேண்டியுள்ளது.

இரட்டை நிலையும் திரிபுப் பிரச்சாரங்களும்:

அதேநேரம், தி.மு.க.வினர் எங்காவது போகிற போக்கில் சொல்லும் வார்த்தைகள் திரிக்கப்பட்டு வேகமாகப் பரப்பப்படுகின்றன; உள்நோக்கம் கற்பிக்கப்படுகின்றன. 2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. பேச்சாளர் திண்டுக்கல் லியோனி பெண்களுக்கு எதிராகப் பேசியதாக நாட்டின் பிரதமர் மோடியே தேர்தல் பரப்புரையில் பேசியது, ஆ.ராசா பொதுவாகப் பேசிய ஒன்றைத் திரித்துத் தனது தாய்க்கு எதிராகப் பேசியதாக எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்தது போன்றவை, தி.மு.க.வை 'பெண்களுக்கு எதிரான கட்சி' எனச் சித்தரிக்கும் அவதூறு ஆயுதத்தை இவர்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்குச் சான்றுகள்.

நாட்டின் பிரதமர், ஒரு மாநிலக் கட்சியின் பெரிய பொறுப்புகள் எதிலும் இல்லாத பேச்சாளருக்கு எதிராக எதிர்வினையாற்றிப் பிரச்சாரம் செய்த வரலாற்றை யாராவது கேட்டதுண்டா? ஏன் பேசினார் என்றால் இது தி.மு.க.விற்கு எதிராகத் தொடர்ந்து முன்வைக்கப்படும் அவதூறு 'அஜெண்டா'.

பா.ஜ.க.விற்கு நிகராகப் பெண்களுக்கு எதிராகப் பேசிய கட்சியோ, பெண்களுக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்களைக் காப்பாற்றிய கட்சியோ இந்தியாவில் வேறு எதுவுமில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தோம். "நாங்களும் இருக்கிறோம்" என்று வந்து நிற்கிறது தவெக.

த.வெ.க. நிர்வாகிகள் சிலர் பெண்களுக்கு இழைத்த குற்றங்களுக்குச் சில ஆதாரங்கள்:

•தூத்துக்குடி (கூட்டுப் பாலியல் வன்கொடுமை): வேலை தேடி வந்த பெண்ணுக்கு மயக்க மருந்து கொடுத்துக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததாகத் தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன், நிர்வாகி ஜெயபால் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதில் குற்ற வாளிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டுச் சமரசம் பேச முயன்றதாக ஸ்ரீவைகுண்டம் தொகுதி த.வெ.க எம்.எல்.ஏ ஜி. சரவணன் மீது, பாதிக்கப்பட்டவரே ஊடகங்கள் முன் சாட்சியம் அளித்துள்ளார். அவர்மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

•இராணிப்பேட்டை (பணம் பறிப்பு மற்றும் மிரட்டல்): கட்சியில் பதவி வாங்கித் தருவதாகக் கூறி பெண்ணுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததோடு, ஆபாச வீடியோக்களைக் காட்டி மிரட்டியதாக மாவட்டச் செயலாளர் விஜய் மோகன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

•பூந்தமல்லி (பெண் நிர்வாகிக்கு பாலியல் தொல்லை): தவெக வேட்பாளரும் மாவட்டச் செயலாளருமான ஆர். பிரகாசம் (குட்டி) தன்னிடம் தவறாக நடக்க முயன்றதாக அக்கட்சியின் பெண் நிர்வாகி ஒருவரே காவல்துறையில் புகார் அளித்தார்.

•சென்னை (போக்சோ சட்டத்தில் கைது): காசிமேடு பகுதியில் மைனர் சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில், ராயபுரம் பகுதி நிர்வாகியான 'பாம்பு' தினேஷ் 'போக்சோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

•கரூர் (கடத்தல் முயற்சி): மருந்துக்கடை பெண் ஊழியருக்குத் தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து, அவரைக் கடத்த முயன்றதாக கிருஷ்ணராயபுரம் ஒன்றியச் செயலாளர் ரமேஷ் மீது புகார் எழுந்து காவல் துறை விசாரணை நடைபெற்றது.

இவையெல்லாம் சில உதாரணங்கள் மட்டுமே. த.வெ.க ஆட்சிக்கு வந்த முதல் நான்கு மாதங்களில் பெண்கள் - குழந்தைகள் மீது இழைக்கப்பட்ட சுமார் 300 பாலியல் குற்ற வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில் பெரும்பாலும் சம்பந்தப்பட்டவர்கள் த.வெ.க. கவினர். ஆனால் 'சிங்கப்பெண் படை' என்றும், 'தாங்கள்தான் பெண்களின் பாதுகாவலர்கள்' என்றும் முதல்வர் அடிக்கும் வெற்று வாய்ச்சவடால்களுக்கு பஞ்சமே இல்லை.

பெண்கள் பாதுகாப்பில் முற்றிலும் தோல்வியடைந்துள்ள த.வெ.க அரசு தி.மு.கவினர் அல்லது தி.மு.க ஆதரவு இணையதளச் செயல் பாட்டாளர்கள் மீது பொய் வழக்குகள் மூலம் கைது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. முதலமைச்சரை விமர்சித்தால் உடனடி நடவடிக்கை; ஆனால், த.வெக.வின் ஆதவ் அர்ஜுனா, எதிர்க்கட்சித் தலைவரை ஆபாசமாக விமர்சித்தால் அது அவரது தனி உரிமை.

முதலமைச்சரின் தாயாரையே கொச்சைப் படுத்தி பா.ஜ.க தலைவர் நயினார் நாகேந்திரன் பேசினால் அது இனிப்பதாக இருக்கிறது. ஆதவ் அர்ஜுனா அவரோடு சிரித்தபடி புகைப்படம் எடுத்துக்கொள்கிறார்.

பெண்களைக் குறித்த இவர்களின் உண்மையான நிலைப்பாடு என்ன? பொய்யையும் பித்தலாட்டத்தையும் தவிர வேறெதுவுமில்லை.



மனுஷ்யபுத்திரன்
மாநில ஆலோசகர், தி.மு.க
தகவல் தொழில்நுட்ப அணி

தி.மு.க.வின் கண்ணியமான அரசியல் பண்பாடு:

பெண்களுக்கு எதிரான கொச்சையான பேச்சுகளை தி.மு.க. ஒருபோதும் ஏற்பதில்லை. சில மேடைப் பேச்சாளர்கள் தங்கள் தலைவர்கள் மீதான ஆபாசப் பேச்சுகளுக்கு எதிர்வினையாக உணர்ச்சிவசப்பட்டுச் சில சொற்களைப் பேசிவிட்டாலும்கூட, தி.மு.க தலைமை அவர்களைக் கண்டித்திருக்கிறது. சில சமயங்களில் கட்சி சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள்கூட எடுக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் தி.மு.க. பெண் கவுன்சிலர் ஒருவர் சற்று எல்லை மீறிப் பேசியபோது, மேடையிலேயே தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதியும், முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபுவும் அதனைக் கண்டித்தனர். இந்தப் பண்பை த.வெ.க, அ.தி.மு.க, பா.ஜ.க பேச்சாளர்கள் தி.மு.க தலைவர்கள் மீது ஆபாசத் தாக்குதல் களைத் தொடுக்கும்போது, அந்தக் கட்சித் தலைமைகள் கண்டித்ததாக வரலாறு உண்டா?

ஆனால், தி.மு.க வெறுப்பாளர்கள், தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் ஏதேனும் சற்று வரம்பு மீறிவிட்டால் ஊடகங்களில் அதைப் பெரும் பேசுபொருளாக்குகின்றனர். தி.மு.க.விற்கு எதிரான கட்சிகளின் இணையக் கூலிப்படைகள் அதை 'ட்ரெண்ட்' செய்து, தி.மு.க ஏதோ பெண்களுக்கு எதிரான கட்சி போன்ற பொய்பிம்பத்தை உருவாக்க முயல்கின்றன.

பெண் விடுதலைக்கு வித்திட்ட தி.மு.க.வின் வரலாற்றுத் திட்டங்கள்:

தி.மு.க. ஆட்சிக் காலங்களில் பெண்கள் முன்னேற்றத்திற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்களும் திட்டங்களும் இன்று இந்தியாவிற்கே முன்னோடியாக இருக்கின்றன. ஒன்றிய அரசும் பல மாநில அரசுகளும் இன்று அந்தத் திட்டங்களைப் பின்பற்ற நிர்பந்திக்கப்பட்டிருக்கின்றன.

தி.மு.க. ஆட்சிக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பெண்களுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை இந்தப் பொய்ப் பரப்புரையாளர்களுக்கு நினைவூட்டுவது அவசியமாகும்.

தமிழ்நாட்டில் 'பெண் விடுதலை' மற்றும் 'சமூக நீதி' என்பது வெறும் அரசியல் முழக்கமாக இல்லாமல், அரசுத் திட்டங்களாக மாறிச் சாத்தியப்பட்டதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் ஆட்சியியல் அணுகுமுறையே முதன்மைக் காரணம். சொத்துரிமை மறுக்கப்பட்ட காலத்திலிருந்து, மாதந்தோறும் வங்கிக் கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும் காலம் வரையிலான தமிழ்நாட்டு மகளிரின் இந்த மாற்றத்தின் பின்னணியில் உள்ள முக்கியத் திட்டங்கள்:

1. சட்டப்புரட்சியும் வாழ்வாதார அடித்தளமும்: கலைஞரின் தொலைநோக்கு:

பெண்களை வெறும் குடும்பக் கட்டமைப்பிற்குள் மட்டும் அடைத்து வைக்காமல், அவர்களைச் சுதந்திரமான சக்திகளாக உயர்த்தும் அடித்தளத்தை அமைத்தவர் கலைஞர்.

•சொத்துரிமையில் சம உரிமை (1989): இந்தியாவிலேயே முதன்முறையாகப் பெற்றோர் சொத்தில் பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தைக் கொண்டு வந்தார். இது பெண்களுக்கான சட்டப்பூர்வமான பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தது.

•சுயஉதவிக் குழுக்கள் இயக்கம் (1989): தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட இந்த இயக்கம், கிராமப்புறப் பெண்களின் கைகளில் சிறுசேமிப்பையும் தொழில்முனைவையும் கொண்டு சேர்த்து, வங்கிக் கடன்களைப் பெறும் அளவிற்கு அவர்களைப் பொருளாதார ரீதியாகத் தற்சார்பு அடையச் செய்தது.

•அதிகாரத்தில் இடஒதுக்கீடு: அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு (கடந்த தி.மு.க ஆட்சியில் இது நாற்பது சதவீகிதமாக உயர்த்தப்பட்டது) மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் 33% (தற்போது 50%) இடஒதுக்கீடு அளிக்கப்பட்டதால், பஞ்சாயத்துத் தலைவர்கள் முதல் மேயர்கள் வரை பெருமளவில் பெண்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தனர்.

•கல்வி மற்றும் ஆரோக்கியப் பாதுகாப்பு: முதல் தலைமுறை பட்டதாரிப் பெண்களுக்குக் கல்லூரிகளில் இலவசக் கல்வி, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் தாய்சேய் நலனைப் பாதுகாக்கும் 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்' ஆகியவை பெண் சமுதாயத்திற்கு வலுவான பாதுகாப்பாக அமைந்தன.

2. பொருளாதாரச் சுதந்திரமும் நவீன முன்னேற்றமும்: மு.க.ஸ்டாலினின் செயல் வடிவம்

கலைஞரால் போடப்பட்ட சமூகப் பாதுகாப்பு அடித்தளத்தின் மீது, பெண்களின் அன்றாடச் செலவுகளையும் சுயமரியாதையையும் உயர்த்தும் நவீன திட்டங்களை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தினார்.

•கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் (மாதம் 1,000): ஒரு கோடியே முப்பதோரு இலட்சத்துக்கும் அதிகமான குடும்பத் தலைவிகளுக்கு மாதம் தோறும் நேரடியாக வங்கிக் கணக்கில் 1,000 வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது பெண்களின் சுயமரியாதையையும், குடும்ப முடிவெடுக்கும் அதிகாரத்தையும் உயர்த்தியுள்ளது.

•விடியல் பயணம் (இலவசப் பேருந்துப் பயணம்): அரசு நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றி பயணிக்க வழிவகை செய்யப்பட்டதன் மூலம், உழைக்கும் பெண்கள் மற்றும் மாணவியரின் மாதாந்திரப் போக்குவரத்து செலவு மிச்சப்பட்டு, அவர்களின் பொருளாதார நடமாட்டம் (Mobility) அதிகரித்துள்ளது.

•புதுமைப் பெண் திட்டம்: அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1,000 வழங்கி, அவர்களின் கல்லூரிப் படிப்பு இடைநிற்றலை முற்றிலும் தடுத்துள்ளது.

•காலை உணவுத் திட்டம் & 'தோழி' விடுதிகள்: தொடக்கப் பள்ளி குழந்தைகளுக்குப் புரதச்சத்து மிக்க காலை உணவு வழங்குவதன் மூலம் தாய்மார்களின் சுமையைக் குறைத்ததோடு, வெளியூர்களில் தங்கிப் பணிபுரியும் பெண்களுக்காகப் பாதுகாப்பான 'தோழி' விடுதிகளையும் தி.மு.க. அரசு அமைத்துத் தந்துள்ளது.

சமூகத்தில் ஏற்பட்ட தாக்கம்:

இந்தத் திட்டங்கள் அனைத்தும் ஏதோ தற்காலிக உதவிகளாக இல்லாமல், பெண்களின் வாழ்க்கை முறையையே மாற்றியமைத்துள்ளன:

1.உயர்கல்வியில் பங்கேற்பு: இந்தியாவில் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதற்கு 'புதுமைப் பெண்' மற்றும் இலவசக் கல்வித் திட்டங்களே சான்று.

2.பொருளாதாரத் தற்சார்பு: 'மகளிர் உரிமைத் தொகை' மற்றும் 'சுயஉதவிக் குழுக்கள்' மூலம் பெண்கள் கடன் சுமையிலிருந்து மீண்டு, சிறு தொழில்களை நடத்தும் வலிமை பெற்றுள்ளனர்.

3.சமூகப் பாதுகாப்பு: மகப்பேறு நிதி, இலவசப் பேருந்துப் பயணம் ஆகியவை பெண்களின் ஆரோக்கியத்தையும் உழைக்கும் திறனையும் மேம்படுத்தியுள்ளன.

4.தொழில் மயமாகலும் பெண்களும்: இந்தியாவிலேயே பெண்கள் அதிகமாக தொழிற்சாலைகளில் பணிபுரியும் மாநிலமாக தமிழ்நாடு மாறியதில் தி.மு.க.விற்குப் பெரும் பங்கு உண்டு.

பெண்களுக்கு வெறும் சலுகைகளை வழங்குவது மட்டுமல்ல வளர்ச்சி; அவர்களைச் சமூகத்தின் சமமான சக்தியாக அங்கீகரிப்பதே உண்மையான வளர்ச்சி என்பதைத் தமிழ்நாட்டின் 'திராவிட மாடல்' ஆட்சி நிரூபித்துள்ளது. கலைஞரால் விதைக்கப்பட்ட பெண் உரிமை விதைகள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் பிரம்மாண்டமான ஆலமரமாக வளர்ந்து தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் தாங்கிப்பிடிக்கும் தூணாக மகளிரை மாற்றியுள்ளது.

இப்போது சொல்லுங்கள்... யார் பெண்கள் முன்னேற்றத்திற்குக் காரணமானவர்கள்? யார் பெண்களின் எதிரி? பெண்கள் பாதுகாப்பு என்று நாடகமாடும் வாய்ச்சொல் வீரர்கள் பெண்களுக்குச் செய்த நன்மைகள் ஏதும் இல்லை. ஆனால் தி.மு.க. எப்போ தெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்போ தெல்லாம் அது முதன்மையாக பெண்களுக்கான அரசாகத்தான் இருந்திருக்கிறது. தமிழ்நாட்டில் நிகழ்ந்த பெண்கள் முன்னேற்றத்திற்கு தி.மு.க.வைத்தவிர வேறு எவரும் உரிமைகோர முடியாது.

பெண்களின் சுயமரியாதை, கண்ணியம், சுதந்திரம் ஆகியவை தி.மு.கவின் முதன்மையான ஆதாரக் கொள்கைகளாகும்! பொய்களை உண்டு வாழும் புழுக்களால் அவதூறுகளின் வழியே இந்தச் சாதனைகளை மறைக்க முடியாது.

ஆசியன் பாரா விளையாட்டில் பேட்மின்டன் கலப்பு இரட்டையர் போட்டியில் இந்தியாவுக்கு வெண்கலம்!

தமிழ்நாட்டு வீராங்கனை தங்கை நித்யஸ்ரீ சிவனுக்கு பாராட்டுகள்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக்.23

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



ஜப்பான் நாட்டில் நடைபெற்று வருகிற 5th Asian Para Gamesஇல் Badminton Mixed Doubles SH6 பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள தங்கை நித்யஸ்ரீ சிவனுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Women's Single SU5 பிரிவில், வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம் தற்போதைய Asian Para Gamesல் 2ஆவது பதக்கத்தைப் பெற்றுள்ள தங்கை மனிஷா ராமதாஸுக்கும் என் பாராட்டுகள்.

தொடர்ந்து சர்வதேச அளவில் பல்வேறு பதக்கங்களைக் குவித்து இந்தியாவுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமைத் தேடித்தரும் தங்கைகள் மனிஷா மற்றும் நித்யஸ்ரீ ஆகியோர் மென்மேலும் சாதனைகள் படைக்க என் அன்பும் வாழ்த்தும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரை: தஞ்சை கவிஞர்

தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா!

எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் வெளியிட கவிச்சுடர் கவிதைப்பித்தன் பெற்றுக் கொள்கிறார்!

தஞ்சை, அக்.23- வழக்கறிஞர் சி. ஜெயசந்திரன், சி.பாலசந்திரனின் தந்தை தஞ்சை கவிஞர் தொல்காப்பியன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா நாளை (24.10.2026) தஞ்சை இராசப்பா நகர், ராஜ்பேலஸ் திருமண அரங்கில் மாலை 6 மணியளவில் இலக்கியமாமணி முனைவர் இரா. கலியபெருமாள் தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் முனைவர் இரா. குணசேகரன் வரவேற்புரையாற்றுகிறார். தென்னங்குடி க. சண்முகசுந்தரம் முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் நூலினை வெளியிட கவிச்சுடர் கவிதைப்பித் தன் நூலினைப் பெறுகிறார்.

மேலும் இவ்விழாவில் தி.மு.க. கல்வியாளர் அணித் தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன் சிறப்புரையாற்றுகிறார்.

பேராசிரியர் ப. திருநாவுக்கரசு கௌரா பதிப்பகத் தலைவர் கௌரராசசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

சி.செயச்சந்திரன் நன்றி கூறுகிறார். விழா ஏற்பாடுகளை தஞ்சை ஞான உதயம் பதிப்பகத்தார் செய்துள்ளனர்.